**FIRST INFORMATION REPORT**
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8110213

1. District : மாவட்டம் THANJAVUR PS: காவல்நிலையம் VIGILANCE & ANTI-CORRUPTION Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 06/2020 Date: நாள் 20.11.2020

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: 7, 7-A and 12 of
(ii) Act சட்டம்: as Amended Prevention of Sections பிரிவுகள்: PC (Amendment)
(iii) Act சட்டம்: Corruption (Amendment) Act Sections பிரிவுகள்: Act 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : 2018 U/s 102 Cr.P.C.

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 19.11.2020 Date from : நாள் முதல் 17.30 Hrs Date to : நாள் வரை 23.00 Hr.
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.11.2020 Time : நேரம் 05.20 Hr
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் 05.30 Hr

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 35 Km North East
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி Sub-Registrar Office, Papanasam. Thanjavur (Dt)
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G. Selvaraj (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Govindaraj
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1963 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Temporary Dy. ICO/Dy. Tahsildar (g) Address : முகவரி Thanjavur

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tmt. V. Jeyaseelarani, Sub-Registrar, Papanasam, Thanjavur (Dt)
2) Tr. R. Sekar, Assistant, Sub-Registry, Papanasam, Thanjavur Dt.
3) Tr. T. Kamaraj, Office Assistant, Sub-Registry, Papanasam, Thanjavur (Dt).
4) Tr. T. Barathidasan, Document Writer, Papanasam.
5) Tr. P. Thirumal, Document Writer Barathidasan's Assistant, Panathidal. Thanjavur (Dt)

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
NIL

GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

2

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்பட்டது:</u>

இன்று 20.11.2020ம் தேதி அதிகாலை 05.30 மணிக்கு, தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், நிலைய பொறுப்பில் இருந்தபொழுது தஞ்சாவூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.G.செல்வராஜ் அவர்கள் கொடுத்த புகாரை பெற்று வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு :- 19.11.2020 ஆம் தேதி மாலை சுமார் 17.30 மணிமுதல் தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அருகில் உள்ள வடக்குபார்த்த வாசல் உள்ள பாபநாசம் சார்பதிவாளர் அலுவலகத்தை திரு.G.செல்வராஜ், தலைமை உதவியாளர்/துணை வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியரகம், தஞ்சாவூர் மற்றும் தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் திரு.N.துரைராஜ், முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆட்சியரகம், தஞ்சாவூர் மற்றும் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திருமதி.P.பத்மாவதி மற்றும் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்கள் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் ஆய்வின் செயல்முறை நடவடிக்கைகள் குறித்து தற்காலிக மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர்/துணை வட்டாட்சியர், திரு.G.செல்வராஜ் அவர்களால் தயார் செய்யப்படும் திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் மகஜர் விபரம் பின்வருமாறு.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(signature) 20.11.20 (G. SELVARAJ)

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

(signature)
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் P. PADMAVATHI
Rank: நிலை Inspector of Police, VXAC, Thanjavur. No.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
20.11.2020 / 0800 Hr.

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தாலுக்கா, பாபநாசம் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அருகில் உள்ள பாபநாசம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரபதிவுகள் செய்வதற்கு பாபநாசம் சார்பதிவாளர் மற்றும் சார்பதிவக அலுவலக அலுவலர்கள் ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாக பத்திரபதிவு செய்பவர்களிடம் பத்திரம் பதிவு செய்வதற்கு கையூட்டு கேட்டுப்பெறுவதாகவும், மேற்படி பொது பணியாளர்களுக்காக, பத்திரம் பதிவு செய்யவருபவர்களிடம் ஆவண எழுத்தர்கள் கையூட்டு பெற்று பொது பணியாளர்களுக்கு கொடுப்பதாகவும், தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசியதகவலினை இன்று 19.11.2020 ஆம் தேதி தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்களிடம் தகவல் தெரிவித்ததன்பேரில், தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரக தலைமை உதவியாளர்/ துணை வட்டாட்சியர், G.செல்வராஜ் ஆகிய என்னையும், திரு.N.துரைராஜ், முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆட்சியரகம், தஞ்சாவூர் அவர்களையும் தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்களாக நியமணம் செய்து மேற்படி திடீர் சோதனைக்கு தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்களுடன் சேர்ந்து பணிபுரிய அனுப்பியதன்பேரில், நானும் திரு.N.துரைராஜ் அவர்களும் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 16.15 மணிக்கு வந்தும், அங்கிருந்து திருமதி.P.பத்மாவதி, காவல் ஆய்வாளர் சகிதம் இரண்டு அரசு வாகனங்களில் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து 19.11.2020 ஆம் தேதி 16.30 மணிக்கு புறப்பட்டு, பாபநாசம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு 17.30 மணிக்கு வந்து, மேற்படி விஜிலென்ஸ் குழுவினர் சகிதம் பாபநாசம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளர் பணியிலிருந்த சார்பதிவாளர் திருமதி.V.ஜெயசீலராணி என்பவரிடம் திடீர் ஆய்வு விபரம் தெரிவித்து திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விபரம் பின்வருமாறு.

மேற்படி பாபநாசம் சார்பதிவாளர் அலுவலகமானது தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தாலுக்கா, பாபநாசம் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு கிழக்கே வடக்குபார்த்த வாசலுடன் அமைந்துள்ளது. பாபநாசம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு மேற்கு பக்கத்தில் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றமும், அதற்கு மேற்கே பாபநாசம் காவல் நிலையமும் உள்ளது. மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு கிழக்கே பாபநாசம் தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் நிலையமும் உள்ளது. மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு எதிர்புறம் கிழக்கு மேற்காக செல்லும் தார்சாலையும், மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு எதிரே இரண்டு டீக்கடைகளும் மாடியில் த.பாரதிதாசன் பத்திர எழுத்தர் அலுவலகமும் உள்ளது. பாபநாசம் சார்பதிவாளர் அலுவலகத்தின் நுழைவு வாயிலை அடுத்து ஒரு பெரிய ஹாலும், மேற்படி ஹாலின் தென்மேற்கு மூலையில் சார்பதிவாளர் திருமதி.V.ஜெயசீலராணி அவர்களது இருக்கையும்,

மேற்படி ஹாலின் தென்கிழக்கு மூலையில் கண்ணாடி தடுப்புடன் கூடிய கணினி அறையும் அதில் செல்வி.K.வினிதா, இளநிலை உதவியாளர் மற்றும் திருமதி.ஜெயவசந்தி, Data Entry Operator ஆகியோர் அமர்ந்திருந்த இருக்கையும், மேற்படி ஹாலின் நடுவில் கணினி அறையை ஒட்டினார்போல் திரு.R.சேகர், உதவியாளர் அவர்களின் இருக்கையும், மேற்படி ஹாலின் வடகிழக்கில் பார்வையாளர்கள் அமர்வதற்குண்டான இரும்பு மற்றும் பிளாஸ்டிக் சேர்கள் போடப்பட்டும், மேற்படி ஹாலுக்கு தெற்குபக்கம் அடுத்தடுத்தாற்போல் தொடர்ச்சியாக நான்கு ஹால்களும் அவற்றில் சார்பதிவாளர் அலுவலக பதிவேடுகள் வைக்கப்பட்டும் உள்ளது.

மேற்படி அலுவலகத்தில் திடீர் ஆய்வின்போது பாபநாசம் சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் 1)அலுவலக உதவியாளர் திரு.T.காமராஜ், த/பெ.தம்பிஅய்யா, வள்ளலார் காலனி, மருங்குளம், தஞ்சாவூர் தாலுக்கா 2)ஆவண எழுத்தர் திரு.த.பாரதிதாசன், த/பெ.தங்கையன், 31A 108 சிவாலயம் மெயின்ரோடு, பாபநாசம், ஆவண எழுத்தர் உரிமம் எண். A6/2013 KUM, 3)ஆவண எழுத்தர் பாரதிதாசனின் உதவியாளர் திரு.P.திருமால், த/பெ.பரமசிவம், மெயின்ரோடு, பனந்திடல், வலங்கைமான் தாலுக்கா, 3)ஒட்டுநர் திரு.P.நடராஜன், த/பெ.பழனிவேல், தென்சருக்கை, பாபநாசம் தாலுக்கா ஆகியோர் மற்றும் சார்பதிவாளரும் சார்பதிவாளர் அலுவலக அலுவலர்களும் அவரவரர் இருக்கையில் அமர்ந்திருந்தனர்.

தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்களும் மற்றும் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினர் அங்கிருந்தவர்கள் அனைவரிடமும் தங்களையும், தங்களுடன் வந்தவர்களையும் அறிமுகம் செய்தபோது, மேற்படி இடத்தில் நின்று கொண்டிருந்த சில நபர்கள் அவரவர்கள் நின்றுகொண்டிருந்த இடத்தை விட்டு நழுவ முயற்சித்தார்கள். தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்கள் அங்கிருந்தவர்களை நிறுத்தி விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் அவர்களை தனித்தனியாக விசாரித்தும் விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி நபர்கள் வைத்திருந்த பணத்திற்கு சரியான முகாந்திரம் கூறிய தொகை அவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது, சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்ற பணமாக இருக்கலாம் என்றும் மேலும் சார்பதிவாளர் மற்றும் சார்பதிவாளர் அலுவலக அலுவலர்களுக்கு கையூட்டு கொடுப்பதற்காக வைக்கப்பட்டிருந்த பணமாக இருக்கலாம் என்ற அடிப்படையில் கீழ்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் ரூபாய்.**40,500/-**ம் திடீர் ஆய்வின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பெயர், பதவி மற்றும் முகவரி | திரும்பஒப்படைக்கப்பட்ட ரூபாய் | கைப்பற்றப்பட்டரூபாய் |
|---|---|---|---|
| 1 | திருமதி.V.ஜெயசீலராணி, சார்பதிவாளர் | 660 | 21,000 |
| 2 | திரு.R.சேகர், உதவியாளர் | 100 | 1,300 |
| 3 | செல்வி.K.வினிதா, இளநிலை உதவியாளர் | 150 | - |
| 4 | திருமதி.ஜெயவசந்தி, Data Entry Operator | 150 | - |
| 5 | திரு.T.காமராஜ், அலுவலக உதவியாளர் | 50 | 1,500 |
| 6 | திரு.த.பாரதிதாசன், ஆவண எழுத்தர் | 120 | 9,200 |
| 7 | திரு.P.திருமால், ஆவண எழுத்தர் பாரதிதாசனின் உதவியாளர் | 40 | 7,500 |
| 8 | திரு.P.நடராஜன், தனியார்-ஓட்டுநர் | 360 | - |
| | **மொத்தம்** | **1630** | **40,500** |

மேற்படி நபர்களிடம் அவர்கள் வைத்திருந்த பணத்திற்குண்டான காரணத்தை கேட்க, அந்தப் பணம் ரூபாய் 1,630/-க்கு மட்டும் சரியான முகாந்திரம் இருந்ததால் அந்தப்பணம் அவரவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது.

மேற்படி நபர்கள் சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது குற்றமுறு நடவடிக்கையின் மூலம் பத்திரப்பதிவு செய்ய வந்தவர்களிடமும், ஆவண எழுத்தர்களிடமும் கையூட்டாக கேட்டு பெற்ற பணமாக இருக்கலாம் என்ற அடிப்படையில் கீழ்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் ரூபாய்.**40,500/-**ம் திடீர் ஆய்வின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

திடீர் ஆய்வின்போது சார்பதிவாளர் திருமதி.V.ஜெயசீலராணி அவர்களின் சந்தன கலர் ஹேண்ட் பேக்கில் (i)தமிழ்நாடு அரசு பதிவுத்துறை முன்பதிவு செய்ததற்கான ஒப்புகைச்சீட்டு என்று ஆரம்பித்து கணினியில் பதிவு செய்யப்பட்ட வெள்ளை தாளின் பின்புறம் "1)மெலட்டூர் ஆண்டாள் - 1 – 2000, 2)காட்டுக்குறிச்சி – 2 – 2000, 3)மெலட்டூர் MOD – 1 – 500, 4)ரசீது – 2 – 400, 5)பாவை கிரயம் - 1 – 7000, 6)இடஆய்வு - 1 – 1000, தஞ்சாவூர் 3000 19.11.020"என்று எழுதப்பட்டு கடைசியில் கூட்டுத்தொகையாக 16,700 என்று எழுதப்பட்ட வெள்ளை தாளில் 500 X 33 = 16,500, 200 X 1 = 200 மொத்தம் ரூபாய் 16,700/- பணத்துடன் மடித்து பின்போடப்பட்டிருந்தது, மேலும் (ii)ஜம்ருதுபேகம், ராஜகிரி என்பவருடைய குடும்ப அட்டை நகலின் பாதியில் Geetha 700/- என்று எழுதப்பட்டும் பின்புறம் எ.வா.மணிகண்டன், S/o.செல்லப்பன் என்று எழுதப்பட்ட வெள்ளை பேப்பரில் 500 X 1 = 500, 200 X 1= 200 மொத்தம் ரூபாய் 700/- பணத்துடன் மடித்து வைக்கப்பட்டிருந்தது மேலும் (iii)துண்டு வெள்ளை பேப்பரில் 500 X 7 = 3500, 100 X 1 = 100 மொத்தம் ரூபாய் 3,600/- பணத்துடன் மடித்து வைக்கப்பட்டிருந்தது, மேலும் (iv)ஹேண்ட் பேக்கில் 500 X 1 = 500, 100 X 1 = 100, 50 X 1 = 50, 10 X 1 =10

தனியாக இருந்த ரூபாய் 660/- ஆக மொத்தம் ரூபாய் **21,660/-** இருந்ததில், அவர் சரியாக முகாந்திரம் கூறிய அவரது சொந்தப்பணம் ரூபாய் **660/-** சார்பதிவாளர் திருமதி.V.ஜெயசீலாராணி அவர்களிடமே கொடுக்கப்பட்டது. மேற்படி சார் பதிவாளரிடம் மேற்படி சரியான முகாந்திரம் கூறாமல் வைத்திருந்த பணம் பற்றி கேட்டபோது அவர் தான் இன்று பத்திரப்பதிவு செய்தவர்களிடமும், ஆவண எழுத்தர்களிடமும் வாங்கிய கையூட்டு தொகையை அவற்றிற்குரிய விபரம் எழுதி பின்போட்டு வைத்திருப்பதாக கூறினார். மேற்படி சார்பதிவாளர் கையூட்டு கேட்டு பெற்று வைத்திருந்த சரியான முகாந்திரம் கூறாத, குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்று வைத்திருந்த பணம் என்ற அடிப்படையில் மேற்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் ரூபாய் **21,000/-** திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜரில் கைப்பற்றப்பட்டது.

திடீர் ஆய்வின் போது திரு.R.சேகர், உதவியாளர், சார்பதிவகம் என்பவர் அவரது வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த ரூபாய் 1,300 மற்றும் மேல்பாக்கெட்டில் வைத்திருந்த ரூபாய் 100 சேர்த்து ரூபாய் 1,400 இருந்ததில் பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த 500 X 2 =1000, 200 X 1 = 200, 100 X 1 = 100 மொத்தம் ரூபாய் **1,300/-**க்கு சரியான முகாந்திரம் கூறவில்லை. அவரது மேல்சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த ரூபாய் **100/-** அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. அவரிடம் மேற்படி பேண்ட் பாக்கொட்டில் வைத்திருந்த பணம் பற்றி கேட்டபோது அவர் இன்று EC எடுக்க வந்தவர்களிடமும் மற்றும் பத்திர பதிவிற்கு வருபவர்களிடமும் அவருக்கு கையூட்டாக கொடுத்த பணம் என்று தெரிவித்தார். எனவே மேற்படி ரூபாய் **1,300/-** திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜரில் கைப்பற்றப்பட்டது.

திடீர் ஆய்வின் போது திரு.T.காமராஜ், அலுவலக உதவியாளர், சார்பதிவகம் என்பவர் அவரது சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த 200 X 4 = 800, 100 X 4 = 400, 50 X 6 = 300, 10 X 5 = 50 மொத்தம் ரூபாய் **1,550/-** இருந்ததில், அவர் ரூபாய் 1,500/- க்கு சரியான முகாந்திரம் கூறவில்லை. மேலும் அவர் சரியான கணக்கு காட்டிய சொந்தப்பணம் ரூபாய் **50/-**. அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. அவரிடம் மேற்படி பணம் பற்றி கேட்டபோது அவர் இன்று வீட்டிலிருந்து ரூபாய் 100 தான் எடுத்து வந்ததாகவும், அதில் ரூபாய் 50 மதியம் சாப்பிட்டது போக பாக்கி ரூபாய் 50/- தான் தனது சொந்தப்பணம் என்றும், மேலும் ரூபாய் 1500 பத்திரபதிவு செய்ய வந்தவர்கள் கொடுத்த கையூட்டு பணம் எனத்தெரிவித்தார். எனவே மேற்படி ரூபாய் **1,500/-** திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜரில் கைப்பற்றப்பட்டது.

திடீர் ஆய்வின் போது சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்த திரு.த.பாரதிதாசன், ஆவண எழுத்தர் அவரது சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த 500 X 18 = 9000, 100 X 2 = 200, 50 X 2 = 100, 20 X 1 = 20 மொத்தம் ரூபாய் **9,320/-** இருந்ததில், அவர் சரியான முகாந்திரம் கூறிய அவரது சொந்தப்பணம் ரூபாய் **120/-** அவரிடமே கொடுக்கப்பட்டது. மேற்படி சரியாக முகாந்திரம் கூறாத பணம் பற்றி கேட்டபோது சார்பதிவாளருக்கு கொடுக்க வைத்திருந்த கையூட்டு பணம் என்றும், மேலும் இன்று சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரயப்பத்திரம் 2, வரவு ரசீது 2, செட்டில்மெண்ட் 2, MOD 1, ஆகிய பத்திரங்களை அவர்

பதிவு செய்ததாகவும், அதற்குரிய கையூட்டு தொகையை தானும் தனது உதவியாளர் திருமால் என்பவரும் வைத்திருந்ததாகவும், தன்னிடம் வழக்கமாக அலுவலகத்தை விட்டு வெளியே வந்து சார்பதிவாளர் புறப்படும் நேரத்தில் signal கொடுப்பார் என்றும், அதேபோல் சார்பதிவாளர் இன்று மாலை 5 ¼ மணியளவில் வெளியே வந்ததாகவும், அதன்பிறகு சார்பதிவாளர் ஜெயசீலராணி அலுவலகத்திற்குள் மீண்டும் சென்றுவிட்டதாகவும், அதன்பிறகு ஒரு 5 நிமிடத்தில் தானும் தனது உதவியாளர் திருமாலும் சார்பதிவாளர் அலுவலகத்தின் உள்ளே கையூட்டு பணத்தை கொடுக்கச் சென்றோம் என்றும் கூறினார். எனவே மேற்படி ரூபாய் **9,200/-** திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜரில் கைப்பற்றப்பட்டது.

திடீர் ஆய்வின் போது திரு.P.திருமால், ஆவண எழுத்தர் பாரதிதாசனின் உதவியாளர் அவர்களிடம் 500 X 13 = 6500, 200 X 4 = 800, 100 x 2 = 200, 20 X 2 = 40 மொத்தம் ரூபாய் **7,540/-** இருந்ததில், அவர் சரியாக முகாந்திரம் கூறிய அவரது சொந்தப்பணம் ரூபாய் **40/-** அவரிடமே கொடுக்கப்பட்டது. மேற்படி சரியான முகாந்திரம் கூறாத பணம் பற்றி அவரிடம் விளக்கம் கேட்க அவர் ஆவண எழுத்தர் பாரதிதாசனின் உதவியாளர் என்றும் மேற்படி பணம் சார்பதிவாளருக்கு கொடுக்க வைத்திருந்த கையூட்டு பணம் என்று கூறினார். எனவே மேற்படி ரூபாய் **7,500/-** திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜரில் கைப்பற்றப்பட்டது.

எனவே சரியான முகாந்திரம் கூற இயலாத மேற்படி கையூட்டு தொகையானது குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்ற பணம் என்ற அடிப்படையிலும், மேலும் சார்பதிவாளர் மற்றும் சார்பதிவாளர் அலுவலக அலுவலர்களுக்கு கையூட்டு கொடுப்பதற்காக கொண்டு வந்திருந்த பணம் என்ற அடிப்படையில் கீழ்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் ரூபாய் **40,500/-** மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி சார்பதிவாளர் ஜெயசீலராணி கையூட்டு பெற்றவர்களின் விபரம் அடங்கிய பெயர்களை எழுதி வைத்திருந்த சீட்டுகளில் பணத்தை மடித்து pin போட்டிருந்த மூன்று துண்டு சீட்டுகளில் இரண்டில் எழுதப்பட்டதும், ஒன்றில் எதுவும் எழுதப்படாமல் உள்ள சீட்டு ஒன்று மற்றும் **1)**பாபநாசம் சார்பதிவாளர் அலுவலக வருகை பதிவேடு 2020, **2)**பாபநாசம் சார்பதிவாளர் அலுவலக தனிநபர் பணக்கையிருப்புப் பதிவேடு 2020, **3)**True copy of the A account details, **4)**True copy of the Sec 41 account details, **5)**True copy of the Sub Division account details, **6)**True copy of the IP camera/CD account details, **7)**True copy of the D account details, **8)**12 பத்திரப் பதிவு செய்யப்பட்ட Scanned copy ஆகிய **8** ஆவணங்கள் இந்த திடீர் ஆய்வின் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின்போது பாபநாசம் சார்பதிவாளர் அலுவலக தனிநபர் பணக்கையிருப்புப் பதிவேட்டின்படி செல்வி.K.வினிதா, இளநிலை உதவியாளர் அவர்களைதவிர மற்ற அலுவலர்கள் சார்பதிவாளர் உட்பட யாரும் அவர்கள் வைத்திருந்த தொகைகளை இன்று 19.11.2020 ஆம் தேதி பதிவு செய்யவில்லை, இருந்தபோதிலும் சார்பதிவாளர் அலுவலக அலுவலர்கள் கூறிய காரணங்கள் ஏற்புடையதாக இருந்ததால் அவர்களது சொந்தப் பணம்

அவர்களிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. பாபநாசம் சார்பதிவாளர் திருமதி.V.ஜெயசீலராணி அவர்களிடம் இன்று பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் பற்றி கேட்க, 5 கிரய பத்திரங்கள், 4 MOD, 2 செட்டில்மெண்ட், 2 ரசீது ஆகியவை பதிவு செய்யப்பட்டதாக தெரிவித்தார்.

மேற்படி திடீர் ஆய்வின்போது மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்/துணை வட்டாட்சியர் அவர்களால் பாபநாசம் சார்பதிவாளர் திருமதி.V.ஜெயசீலராணி மற்றும் ஆவண எழுத்தர் திரு.த.பாரதிதாசன் ஆகியோரை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பெறப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறைகள் இன்று 19.11.2020 ஆம் தேதி இரவு 22.00 மணிக்கு முடிக்கப்பட்டது.

எனவே, மேற்படி சார் பதிவாளர் (1) திருமதி. V.ஜெயசீலராணி, பத்திரப் பதிவு செய்ய வந்தவர்களிடமும், ஆவண எழுத்தர்களிடமும், குற்றமுறு நடவடிக்கை மூலம் பெற்று வைத்திருந்த பணம் ரூ. 21,000/-ம் (2) சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்த உதவியாளர், திரு. R.சேகர் என்பவரிடமிருந்து குற்றமுறு நடவடிக்கை மூலம் பெற்று வைத்திருந்த பணம் ரூ.1,300/-ம், (3) சார் பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக இருந்த திரு.T.காமராஜ் என்பவரிடமிருந்து குற்றமுறு நடவடிக்கை மூலம் பெற்று வைத்திருந்த பணம் ரூ.1,500/-ம், (4) சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்த ஆவண எழுத்தர் திரு.த.பாரதிதாசன் என்பவரிடமிருந்து குற்றமுறு நடவடிக்கை மூலம் பெற்று வைத்திருந்த பணம் ரூ.9,200/-ம், (5) சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்த ஆவண எழுத்தரின் உதவியாளர் திரு.P.திருமால் என்பவரிடமிருந்து குற்றமுறு நடவடிக்கை மூலம் பெற்று வைத்திருந்த பணம் ரூ.7,500/-ம், ஆக கூடுதல் ரூ.40,500/- யையும், மேற்படி பாபநாசம் சார் பதிவாளர் திருமதி. V.ஜெயசீலராணி, உதவியாளர் திரு. R.சேகர், அலுவலக உதவியாளர் திரு.T.காமராஜ், ஆகியோர் குற்றமுறு நடவடிக்கையின் மூலம் பத்திரம் பதிவிற்கு வந்தவர்களிடமும், பத்திர எழுத்தர்களிடமும் கையூட்டாக கேட்டு பெற்ற பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையலும், உரிமைகோராத பணம் மற்றும் அவ்வாறு குற்றமுறு நடவடிக்கையின் மூலம் பெற்ற கையூட்டு தொகை மற்றும் ஆவண எழுத்தர் திரு.த.பாரதிதாசன் மற்றும் திரு.P.திருமால் ஆகியோர் சார் பதிவாளர் திருமதி.V.ஜெயசீலராணி என்பவருக்கு கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணம் என்ற சந்தேகத்தின் பேரிலும், மேலும் அரசு கணக்கில் காட்டப்படாத பணமாக இருப்பதாலும், மேற்படி சார் பதிவாளர் திருமதி.V.ஜெயசீலராணி, உதவியாளர் திரு. R.சேகர், அலுவலக உதவியாளர் திரு.T.காமராஜ், ஆவண எழுத்தர் திரு.த.பாரதிதாசன் மற்றும் ஆவண எழுத்தரின் உதவியாளர் திரு.P.திருமால் ஆகியோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது.Sd. G.Selvaraj, 20.11.20

Sir,

The above mentioned peitition with seized money in the proceedings cum Mahazar has been received from the Temporary Deputy Inspection Cell Officer/Deputy Tahsildar, Thanjavur on 20.11.2020 at 05.30 hrs and registered as a case in Thanjavur V & AC Cr.No.06/2020 u/s 102 Cr.P.C. and u/s. 7, 7-A and 12 of Prevention of Corruption (Amendment) Act, 2018 by me on 20.11.2020 at 06.00 hrs -Sd-.P.Padmavathi, Inspector of Police, V&AC, Thanjavur 20.11.2020

முதல் தகவல் அறிக்கையின் அசலையும் மற்றும் திடீர் ஆய்வு நடவடிக்கைகள் ஆகியவற்றையும் கும்பகோணம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் தனி நீதிபதி அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்றை நிலைய கோப்பில் வைக்கப்பட்டது.

P. Padmavathi
20/11/2020 1 hrs
[P. PADMAVATHI]
Insp. of Police (V&AC)
Thanjavur.